**மஹவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சபைக்குச் சொந்தமான நூலகம் மற்றும் பொது வியாபார சந்தை அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 5,000,338 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | சீராக்கப்பட வேண்டிய மூலதனமாக்கல் அடுத்த ஆண்டின் கணக்குகளில் கணக்கீடு செய்வதாக குறிப்பிட விரும்புகின்றேன். | கட்டிட அபிவிருத்தி செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 3,864,625 ஆக இருந்த போதும் அது ரூபா 2,987,000 ஆன கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 877,625 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதாக அறியத் தருகின்றேன். | நீதிமன்ற தண்டப்பண மற்றும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஆண்டின் இறுதியில் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமான மீதி ரூபா 13,592,137 ஆக இருந்த | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவேன். | முத்திரைக் கட்டணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் |

| | | |
|---|---|---|
| போதும் ரூபா 19,548,206 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 5,956,069 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,281,032 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,037,800 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி<br>பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 1,651 வீதவரி அலகுகளிடமிருந்து ரூபா 4,993,440 ஆன வீத வரி தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அறவிடுவதற்கு வேலைத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) வாடகை<br>மஹவ பொது வியாபார கடைத்தொகுதியின் 24 கடைகளிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 410,384 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 422,867 தொகை ஊழஎனை-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பதிவழிப்பதற்காக பொதுச்சபை அங்கீகாரமின்றி கௌரவ ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் காணப்படும் நிலுவைத் தொகை எதிர்வரும் காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடை வாடகை உரிய காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மஹவ பிரதேச சபையின் வருடாந்த கேள்வி அடிப்படையில் 02 வாராந்தச் சந்தைகள், 03 மீன் கடைகள், 02 இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,085,415 தொகை குத்தகையாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பல்பொல் பஸ் நிறுத்தும் இடத்தில் வியாபார கடைத் தொகுதி 07 கடைகளிலிருந்து ரூபா 526,039 ஆன நிலுவைத் தொகையொன்றும் ரூபா 63,592 ஆன தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ரூபா 109,889 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ஏனைய வருமானம்<br>----------------------------------<br>2021 ஆம் ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மகாவ பிரதேச சபைக்குச் சொந்தமாக காணப்படும் வீதிப் பதப்படுத்தல் றம் வண்டி மற்றும் துஊடீ இயந்திரம் வாடகைக்கு வழங்குவதற்காக 5 சந்தர்ப்பங்களின் போது பெற வேண்டிய வருமானம் தொடர்பாக பரீட்சித்த போது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தும் 02 நபர்களிடமிருந்தும் ரூபா 2,172,293 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 172,540 தொகை கிடைத்துள்ளது. இரண்டு நபர்களிடமிருந்து பெற வேண்டிய தொகையில் ஒரு நபரிடமிரந்து ரூபா 7,755 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | இத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால்

நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதுறுகம பெயரிலான கிராமத்தில் 107 ஆம் இலக்க காணித்துண்டு 3 ஏக்கர் 20 பேர்ச் அளவிலான காணியில் 1968 பெப்ரவரி 16 ஆந் திகதி குருணாகலை மாவட்ட செயலாளரால் அப்போதைய கிராம சபைக்கு வீடமைப்புத் திட்டமொன்றுக்காக கையளிக்கப்பட்டிருந்தது. இக்காணி எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமலும் வீடமைப்பு திட்ட முறைமை செயற்படுத்தப்படாதிருந்த துடன் இக்காணி தொடர்பாக 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது 21 குடும்பங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் அத்துமீறி இக்காணியில் நிரந்தர வீடுகளை கட்டி வருடக் கணக்காக குடியிருந்த போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதுறுகம வீடமைப்புத் திட்ட செயற்திட்டத்திற்காக இந்தக் காணி 1968 பெப்ரவரி 16 ஆந் திகதி அப்போதைய கிராம சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அக்கையளிப்பு கட்டளையில் இக்காணி வீடமைப்பு திட்டத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பிரதேசத்தில் காணி இல்லாத குடும்பங்கள் இந்த இடத்தில் நிரந்தர வீடுகளை அமைத்து குடியிருக்கின்றனர். | காணி குத்தகைக்கு வழங்கும் போது காணி குத்தகைக்கு வழங்கப்பட்டு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு அல்லது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |